2002 ஏப்ரல் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நடுத்தட்டு மக்களையும் பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்பதனைக் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

THIRU C. GNANASEKARAN: Hon. Speaker Sir, I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த (குறுக்கீடு) சரி, திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

THIRU C. GNANASEKARAN: Speaker Sir, I, don't want to even go into the merits of this one. Already I had given notice of an adjournment Motion under Rule 56. Yesterday itself, the reply was ready. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் வேறொரு கொஸ்டினைக் கேட்க, அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தர ஆரம்பித்தார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புவதெல்லாம், ஏற்கெனவே நாங்கள் 56 ஆவது விதிப்படி கொடுத்திருக்கக்கூடிய அந்தப் பொருள் குறித்து, எங்களையும் நீங்கள் பேச அனுமதித்துவிட்டு, பிறகு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொல்லியிருந்தால், ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள் விழிப்போடு செயல்படுகிறார்கள் என்ற எண்ணமாவது மக்களுக்கு வரும். இப்போதோ, நாங்கள் எதுவுமே செய்யவில்லை என்பதுபோல ஒரு தோற்றம் வெளியிலே வந்துவிடும். நாங்கள் ஏற்கெனவே அறிவிப்புக் கொடுக்காத நிகழ்வுகள் இருக்குமேயானால் அமைச்சர் அவர்கள் 110 ஆவது விதிப்படி நிச்சயமாக அவைக்கு அறிக்கை வைத்திருக்கலாம். (மணியடிக்கப்பெற்றது) நான் இதைப் பற்றிப் பேசி உள்ளே போக விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு, சிறப்புக் கவன ஈர்ப்பு எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இது ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி, முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக 'இந்து' பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருந்தது. அதனால்தான் அமைச்சர்

அவர்கள் 110ஆவது விதியின்கீழ் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். மற்றவை, சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கக்கூடிய கவன ஈர்ப்பு ஆகியவையெல்லாம் உரிய முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படுகின்றன. பேரவை விதி...

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே,...

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே ...

திரு. கே. ஆறுமுகம்: தலைவர் அவர்களே ...

திரு. இரா. திருமாவளவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விதி 56-ன்கீழ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி, 110ஆவது விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் இதை வழங்கியிருக்கிறார்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய கவன ஈர்ப்பு, சிறப்புக் கவன ஈர்ப்பு எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்கள்.

முற்பகல் 11-35

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்பு முன்னறிவிப்போ உறுப்பினர்களாலே கொடுக்கப்பட்டிருந்தால், அந்தப் பிரச்சினையை அவர்கள் எழுப்பவிட்டு, பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும். எனவே யாரும் கேட்காத ஒன்றுக்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கின்ற நேரத்திலேயும், கொள்கை பற்றிச் சொல்லும்போதும் மட்டும் 110-ஐப் பயன்படுத்தினால் முறையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அதையே நாம் நடைமுறையாகப் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்காலத்திலே நீங்கள் சொன்ன ஆலோசனை பரிசீலிக்கப்படும். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, நீங்கள் உட்காருங்கள்.